[திரு. சே. ரகுபதி] [1993 மார்ச் 31

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 4,290 ஆகும். அரசாங்கம் ஆணைகள் இட்ட பிறகு, அந்த ஆணைகளை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்று அதன்பிறகு அந்தத் தொழிலாளர்களுடைய கூட்டுக் குழு அந்தத் தடையுத்தரவை விலக்கிக் கொண்ட பிறகு இன்றைக்குப் புரட்சித்தலைவியினுடைய அரசு நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாகாத வகையிலேதான் இந்தப் பேச்சுவார்த்தைகளில் எல்லாம் ஈடுபடமுடியும். இல்லையென்று சொன்னால் Contempt of Court Proceedings என்று வந்துவிடும். எனவே, நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினாலே நாம் தொழிலாளர் நலத் துறையின் சார்பில் அந்த தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களையும், நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களையும், அழைத்துப் பேசி, உரிய வகையிலே சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

*திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத்துறை தலைவரின் 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 18-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது . அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 103-வது அறிக்கை.

(2) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் செயல்முறை குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 26-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 104-வது அறிக்கை.

1993 மார்ச் 31]

(3) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் செயல்முறைகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 10-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள மேல் நடவடிக்கை பற்றிய குழுவின் 105 வது அறிக்கை.

(4) 1984-85ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின்மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 106-வது அறிக்கை. நன்றி, வணக்கம்.

7. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்தல். 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு நிதியமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.